பசுமை விகடன்

<u>தேதி</u> : 25.11.11

**நல்வழி காட்டும் நாட்டுக் கோழி வளர்ப்பு...**

கோழிக்குஞ்சு உற்பத்தி மூலமே குதூகல வருமானம்...

நாட்டுக் கோழியை, மேயவிட்டுத்தான் வளர்க்கணும். பிரய்லர் கோழி மாதிரி கொட்டகைக்குள்ள அடைத்து வைத்து கம்பெனி தீவனம் கொடுத்தால்... அதை நாட்டுக்கோழி என்று சொல்ல முடியாது. 'நாட்டு பிராய்லர் கோழி என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம். அதே சமயம், மேய்ச்சல் முறையில் அதிகளவு கோழிகளைப் பராமரிக்க முடியாது என்பதும் உண்மை. அதனால்.. அடைப்புடன் கூடிய நடமாடும் முறையில் (கொட்டில் மற்றும் மேய்ச்சல் முறை) வளர்க்கும் போது, நாட்டக்கோழிகளைத் தரம் குறையாமலும் ஆரோக்கியமாகவும் வளர்க்க முடியுது என்று சொல்கிறார், தஞ்சாவூர் மாவட்டம், திருமங்கலக் கோட்டை பகுதியைச் சேர்ந்த துரைசாமி.





கொட்டிலில் மேயும் கோழிகள்...



வலை பாதுகாப்பில் கோழிகள்...



கோழிகளுடன் துரைசாமி...

ஆட்டுக்கொட்டகையில் தோன்றிய யோசனை!

கோழிகளுக்குத் தீவனம் போட்டபடியே நம்மிடம் பேச்சைத் தொடர்ந்த துரைசாமி.. நான் 5 ஏக்கரில் நெல் விவசாயம் செய்துக்கிட்டிருக்கிறேன். அதனுடன் கொட்டில் மற்றும் மேய்ச்சல் முறையில் ஆடுகளை வளர்க்கலாம் என்று வலை வேலியோட கொட்டகை அமைத்தேன். ஆனால், ஆடு வளர்ப்பு எனக்கு சரிபட்டு வரவில்லை. அதனால், அதை விட்டுவிட்டேன். சும்மா கிடக்கும் கொட்டகையில் உருப்படியாக ஏதாவது செய்யலாம் என்று யோசித்தப் போது கிடைத்ததுதான்.. கோழி வளர்ப்பு!

நாமக்கல்லில் இருக்கும் நாட்டுக்கோழிப் பண்ணையில், ஒரு குஞ்ச 35 ரூபாய் என்று ஒரு நாள் வயதுள்ள 200 கோழிக்குஞ்சுகளை வாங்கிக்கிட்ட வந்து வளர்க்க ஆரம்பித்தேன். என்கிட்ட இருந்த கொட்டகையில் 100 கோழிகளைத்தான் வளர்க்க முடியும். ஆதனால் மூன்று மாதத்தில் குஞ்சுகள் கொஞ்சம் பெரியதானதும் 90 பெட்டை, 10 செவல்களை மட்டும் வைத்துக் கொண்டு மிச்சத்தை விற்றுவிட்டேன். குஞ்சுகளை வாங்கிக் கொண்டு போனவங்க அடிக்கடி வந்து, கோழிக்குஞ்சு வேண்டும் என்று கேட்டார்கள், அப்போதுதான் குஞ்சுகளுக்கு நிறைய தேவை இருப்பது புரிந்தது. அதன் பிறகு கோழிக்குஞ்சு உற்பத்தயில் தீவிரமாக இறங்கிட்டேன்.

வாரத்திற்க்கு 75 குஞ்சுகள்!

பொதுவாக, ஐந்தாறு மாத வயதுக்கு மேல் ஒன்றொன்றாக முட்டை போட ஆரம்பித்ததும்.. 9-ம் மாதத்திலிருந்து முட்டைகள் அதிகளவில் கிடைக்க ஆரம்பித்தது. முட்டைகளை இன்குபேட்டர் மூலமாக பொரித்து விற்பனை செய்கிறேன். முட்டைகளைத் தனியாக விற்பதில்லை. வாரத்திற்க்கு ஐம்பதிலிருந்து 100 குஞ்சுகள் வரைக்கும் உற்பத்தியாகும். ஏதாவது காரணத்தால் இறந்தது போக, சராசரியாக வாரத்திற்க்கு 75 குஞ்சுகள் விற்றுக் கொண்டிருக்கிறேன்.

மூன்று வயதானதுக்குப் பிறகு முட்டை உற்பத்தி குறைந்துவிடும். அதனால் மூன்று வருடத்திற்கு ஒரு முறை தாய்க்கோழிகளை மாற்றிவிட வேண்டும். என்கிட்ட உற்பத்தியாகும் குஞ்சுளையே தனியா வளர்த்து, தாய்க்கோழிகாளக வைத்துக் கொள்வேன்.

செலவைக் குறைக்க பசுந்தீவனம்!

ஒரு கோழிக்கு ஒரு நாளைக்கு 120 கிராம் என்ற கணக்கில், 100 கோழிகளுக்கும் சேர்த்து தினமும் 12 கிலோ அடர்தீவனம் தேவைப்படும். நான் பசுந்தீவனத்தை அதிகமாக கொடுத்து, அடர்தீவனச் செலவைக் குறைகிறேன். 100 கோழிகளுக்கும் சேர்த்து ஒரு நாளைக்கு 4 கிலோ

அடர்தீவனம்தான் கொடுக்கிறேன். எருமைப்புல், கிளரிவீடியா, வாதமடக்கி, முள்முருங்கை, அசோலா, குதிரைவாலி என்று கிடைக்கும் தீவனங்களை 15 கிலோ அளவிற்க்கு கொடுக்கிறேன்.

அதுவுமில்லாமல் அடர்தீவனத்துக்காகவும் நான் அதிகமாக செலவழிப்பதில்லை 3 கிலோ சோள மாவு, 800 கிராம் நொய் குருணை, 100 கிராம் கம்பு, 100 கிராம் கேழ்வரகு இதை மட்டும் வைத்து 4 கிலோ தீவனம் தயாரித்துவிடுவேன். இதற்கு 60 ரூபாய் தான் செலவாகிறது.

காய்கறி கடைகளில் இலவசமாக கிடைக்கக்கூடிய கழிவுகளையும் அவ்வப்போது எடுத்து வந்து கோழிகளுக்கு கொடுக்கிறேன். இதையெல்லாம் கோழிகள் விரும்பி சாப்பிடுவதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து, ஆரோக்கியமாக இருக்கு. பெரிய அளவில் நோய்களும் வருவதில்லை.

பேன்களைத் துரத்தும் மண்குளியல்

நாட்டுக்கோழிகளுக்கு இயற்கையாகவே மண் குளியல் செய்யும் பழக்கம் உண்டும். இறக்கையை விரித்து வெயிலில் காய வைத்து மண்ணில் போட்டு அடித்துக் கொள்ளும் என்பதால் தேவையில்லாத ரோமங்கள், பேன்கள் எல்லாம் தானாகவே உதிர்ந்துவிடும். கொட்டிலில் அடைத்து வைத்தால்.. மண் குளியலுக்கு வாய்ப்பில்லாமல் போய்விடும். கொட்டில் மற்றும் மேய்ச்சல் முறையில் கோழிகளுக்கு சுதந்திரமாக மேயும் உணர்விருப்பதால், இயற்கையாகவே கோழிகள் ஆரோக்கியமாக வளர்கிறது.  இந்த முறையில் எச்சங்களால் பரவும் நோய்கள் குறைவாக இருக்கிறது.

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால்.. கொட்டிலில் அடைத்து வைக்கும் போது கோழிகளுக்குள் சண்டை வந்து ஒன்ரை ஒன்று கொத்திக் கொள்ளும். அதற்காக அலகை வெட்டி விடுவார்கள். ஆனால், கொட்டில் மற்றும் மேய்ச்சல் முறையில் இந்தப் பிரச்சினை இருப்பதில்லை. கோழிகளுக்குள் சண்டை வந்தது என்றால் பறந்து போய் தப்பித்துக் கொள்ளும். நாட்டுக் கோழிகளோட அலகை வெட்டிவிட்டால், அதற்கு சந்தையில் விலை கிடைக்காது என்பதையும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நான் உற்பத்தி செய்யும் குஞ்சுகளை பெரும்பாலும் ஒரு நாள் வயதிலேயே விற்றுவிடுவேன். ஒரு குஞ்சு 35 ரூபாய் என்று வாரத்திற்க்கு 75 குஞ்சுகள் மூலமாக 2,625 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இதில் தீவனச் செலவு, பராமரிப்பு எல்லாம் போக வாரத்திற்க்கு 2,000 ருபாய்க்கு மேல் லாபம் கிடைக்கிறது. நானே பராமரிப்பதால் பெரிய அளவில் செலவில்லை. அதனால் விவசாயத்துடன் சேர்த்து நான் மட்டுமே பார்க்கும் அளவிற்க்கு 100 கோழிகளை மட்டும் வைத்திருக்கிறேன்.

| கொட்டில் மற்றும் மேய்ச்சல் முறையில் 100 நாட்டுக் கோழிகள் வளர்த்து, கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்ய துரைசாமி சொல்லும் செலவு – வரவு கணக்கு (மூன்று ஆண்டுகளுக்கு) | | |
|---|---|---|
| **விவரம்** | **செலவு** | **வரவு** |
| நிரந்தரச் செலவுகள்<br>கொட்டகை, வேலி | 25,000 | |
| இன்குபேட்டர் | 8,000 | |
| தீவனத் தட்டுகள் | 1,000 | |
| நடைமுறைச் செலவுகள்<br>120 கோழிக்குஞ்சுகள் | 4,200 | |
| 3 ஆண்டுகளுக்கான தீவனம் | 63,000 | |
| பராமரிப்பு | 30,000 | |
| மின் கட்டணம் | 1,400 | |
| 3 ஆண்டுகளில் 9,000 குஞ்சுகள் விற்பனை மூலம் வரவு | | 3,15,000 |
| 3 ஆண்டு முடிவில் தாய்க்கோழிகள் விற்பனை மூலம் வரவு | | 40,000 |
| மொத்தம் | 1,32,600 | 3,55,000 |
| நிகர லாபம் | | 2,22,400 |

**தொடர்புக்கு**

துரைசாமி

திருமங்கலக் கோட்டை

தஞ்சாவூர் மாவட்டம்

99434-85769